Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Feminist Thoughts in the Poems of Shivavakkiyar

**Dr. S. Elamaran**, Assistant Professor, Research Centre of Tamil,
Lekshmipuram College of Arts and Science, Neyyoor, Kanniyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980
**DOI: 10.5281/zenodo.14744579**

## Abstract

*Shivavakkiyar raised his voice against traditions that hindered social progress in his times. He condemned the belief that women's menstruation was of great sin or impurity. He strongly opposed such false customs, idol worship in temples and caste-based oppression. Shivavakkiyar was a visionary who praised femininity and rejected the practice of excluding women by labelling their natural bodily functions as impure. Despite the common belief that menstruation was unclean, Shivavakiyar recognized its significance in the creation of life. According to him, the flow of blood stops and is collected marking the cycle of life itself. While other Siddhas often held negative views towards femininity, Shivavakkiyar's songs and teachings reveal his deep respect for women. His honest opposition to the notion of menstruation as impurity is one of the earliest forms of support for women's rights in Tamil society and an evidence for gender equality and humanity.*

**Keywords:** Shivavakkyar, Women, Awareness, Impurity, Menstruation, Worship.

## References

[1] Ilamathi Sanakiraman, K. *Sitharkalin Sinthanaikal Pakam-1*. Kurinji Pathippagam, Puducherry, 1991.
[2] Ilamathi Sanakiraman, K. Sithar *Ilakkiyankalil Penkal Kurittha Pathivukal*. *Vallamai Minnithazh*, January 18, 2019.
[3] Ilamathi Sanakiraman, K. Sithar *Ilakkiyankalin Vazhi Iraikkodpadu*, Sarvathesa Tamizh Ayvithazhal, 30-04-2021.
[4] Vadivelu Mudaliar, M. *Sivavakkiyar Padal Moolamum Uraiyum*. Eratthina Nayakar Mattum Sons, Chennai, 1953.
[5] Ananda Ravi Sastry, K.A. *Sittharkalin Samuthaya Sinthanaikal*. Pavai Publications, Chennai, 2008.
[6] Vanathipan, *Pathinettu Sittharkalin Seeriya Vazhkkai*, Maka Pathippagam, Gowri Vakkam, Chennai, 2009.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# சிவவாக்கியரின் பாடல்களில் பெண்ணியச் சிந்தனைகள்

**முனைவர் சு. இளமாறன்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980
**DOI: 10.5281/zenodo.14744579**

**ஆய்வுச்சுருக்கம்**

*சிவவாக்கியர் சமூக வளர்ச்சிக்குத் தடைக்கல்லாகயிருந்த மரபுகளுக்கு எதிராக உரக்கக் குரல் எழுப்பியுள்ளார். பெண்களுக்கு இயற்கையாக ஏற்படும் மாதவிலக்கினைப் பெரும்பாவம், தீட்டு என்று கூறுவதையும் சிவவாக்கியர் அன்றைக்கே கண்டித்துள்ளார். போலி ஆசாரங்களையும், கோவில் உருவ வழிபாட்டையும், சாதி ஒடுக்கு முறைகளையும் வலுவாக எதிர்த்துள்ளார். பெண்மை போற்றிய பெருந்தகையாளர். பெண்களின் இயல்பான வழிபாட்டினைத் தீட்டென்று சொல்லி பெண்களை ஒதுக்கி வைக்கும் செயல்பாட்டையும் சிவவாக்கியர் கண்டிக்கின்றார். ஏனெனில் தாயின் இயல்பான மாதவழிபாடாகிய உதிரப் போக்கு நின்று பின் உருதிரண்டு தான் உயிர்கள் உருக்கொள்கின்றன என்ற உண்மை தெரிந்திருந்தும் சமூகம் பெண்களை விலக்கி வைக்கிறது. ஏனைய சித்தர்கள் பெண்மையை வெறுத்தொதுக்கும் பண்பினைக் கொண்டிருந்தனர். ஆனால், சிவவாக்கியர் பெண்மையைப் போற்றும் பெருந்தகையாளராக விளங்கியிருக்கிறார் என்பதை அவரின் பாடல்களின் வழி உணர முடிகிறது. மாதவிலக்குத் தீட்டுக்கு எதிரான சிவவாக்கியரின் குரலே, மனிதசமுதாயத்தில் முன்வைக்கப்பட்ட பெண்களுக்கான முதல் ஆதரவு குரலாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** சிவவாக்கியர், பெண்கள் விழிப்புணர்வு, தீட்டு, மாதவிலக்கு, வழிபாடு.

**முன்னுரை**

சித்தர் பாடல்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. சித்தர் பாடல்கள் தோன்றிய காலம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டாகும். சித்தர்கள் தூய சிந்தையாளர்கள் நெஞ்சத்தில் உள்ளவற்றை அஞ்சாமல் சொல்வார்கள். அனைத்து துன்பங்களுக்கு மூலமாக இருப்பது உள்ளம் தான் என்பதைக் கூறியவர்;கள். பட்டறிவினைத் தெளிவிக்கும் அமுதங்கள். மனநோய் நீக்கி வாழ்விற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குகளாகத் திகழ்கின்றனர். தமிழகத்தில் சித்தர் தத்துவம் சைவம் மற்றும் வைணவம் இரண்டிற்கும் ஏற்பட்ட முரண்பட்ட நிலையில் சித்தர் தத்துவம் தமிழகத்தில் தோன்றித் தனித்த இடத்தைப் பெற்றுள்ளது. சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் தனக்கான இலக்கியங்களைப் படைத்துக்கொண்டது போல சித்தர் மரபில் இலக்கியப் படைப்புகள் தோன்றின. அதன் அடிப்படையில் சித்தர்களின் தத்துவங்களை, சித்தர் பாடல்களைக் கொண்டுள்ளன. சித்தர்

பாடல்களில் தத்துவம் அமைந்திருந்தாலும் தமிழ்ச் சமூகத்தின் நடப்பியலைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். சித்தர்கள் சமூக வாழ்வில் காலங்காலமாக நிலைத்திருந்த கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களைச் சுட்டியுள்ளனர். இப்பாடல்கள் இனம்,மதம் ஆகிய வேறுபாடுகளை மறந்து மனிதகுலம் அனைத்தினையும் ஒன்றுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளன. உயிர்களிடத்தில் அன்பு செலுத்;துதல், தீண்டாமை,பெண் நலம் ஆகியவை சார்ந்த கருத்துகளை முன்வைக்கின்றன. அந்த வகையில் சிவவாக்கியரின் பாடல்களில் பெண் பற்றிய கற்பித்தங்கள், சமூகத்தில் எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருந்ததை இக்கட்டுரை வெளிக்காட்டுகிறது.

**சிவவாக்கியரின் விழிப்புணர்வு சிந்தனைகள்**

தாம் பிறக்கும் போதே 'சிவ சிவ' என்று உச்சரித்தபடியே பிறந்தமையால் இவரை சிவாக்கியர் என்று அழைத்தனர். (வானதீபன், பக். 23) சித்தர் பாடல்கள் திரட்டில் இதுவரை 526 பாடல்கள் கிட்டியுள்ளன. அறிவுதான் இறைவன் என்று விளக்கம் தருகின்றார் சிவவாக்கியர். பாமர மக்களும் தம் அன்பினால் இறைவனை வணங்க முடியும். இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான் என்ற தத்துவத்தினை, சிவவாக்கியர் குறிப்பிடுகின்றார். சமுதாயத்தில் பல புரட்சிகளை ஏற்படுத்திய, சிவவாக்கியர், 'புரட்சிச் சித்தர்' என்று அழைக்கப்பட்டார். சிவவாக்கியர் உருவ வழிபாட்டை முற்றிலும் மறுத்தார். கடவுளின் பெயரால் சிலை உருவங்கள் செய்து வைத்து வணங்குவதும், அவைகளுக்குத் தினசரி பூசைகள், திருவிழாக்கள் செய்வதை மூடப்பழக்கங்கள் என எதிர்க்கிறார்.

சிவவாக்கியர், ஆதி உண்டு, அந்தம் இல்லை நாலு வேதமில்லை என வேதத்தை மறுத்து ஆன்மா குறித்த சிந்தனையை முன்வைக்கிறார்.

**கறந்த பால் முலைபுகா, கடைந்த வெண்ணெய் மோர்புகா**
**உடைந்து போன சங்கின் ஓசை உயிர்களும் உடல்புகா**
**விரிந்த பூவும், உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம் புகா**
**இறந்தவர் பிறப்பதில்லை, இல்லை, இல்லையே (சிவ., 47)**

நல்ல சுவை மிகுந்த உணவுப் பண்டங்களைச் சமைத்த சட்டியால், அந்த உணவின் ருசியை உணர்ந்து கொள்வது சாத்தியமில்லாதது போலவே மனம் எனும் கோவிலுக்குள் இறைவன் உறைந்திருப்பதை அறியாமல் வெறும் கல்லை நட்டு வைத்து அதற்கு தெய்வமென்று பெயருமிட்டு பூக்களாலும் முணமுணென்ற மந்திரங்களாலும் வழிபாடு செய்வது அறியாமையேதான் அந்த மந்திரத்தால் எந்த பயனுமில்ல்லை என்கிறார்.

**நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே**
**சுற்றி வந்து முணமுணவென்று சொல்லும் மந்திரம் ஏதடா**
**நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள் இருக்கையில்**
**சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமோ**

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

என உருவ வழிபாட்டை மறுக்கிறார். நாலு வேதம் ஓதுபவர்களை

**பிறந்தபோது கோவணம் இலங்கு நூல் குடுமியும்**
**பிறந்துடன் பிறந்தவோ பிறங்கு நாற் சடங்கலோ**
**மறந்த நாலு வேதமும் மனத்துலே உதித்தவோ**
**நிலம் பிளந்து வான் இடிந்து நின்றதென்ன வல்லீரே (சிவ., 192)**

என இடித்துரைக்கிறார்.ஓசையுள்ள கல்லை இரண்டாய் உடைத்து, வாசலில் பதித்த அந்தக் கல்லை மிதித்துக்கொண்டு செல்லுகிறீர்கள். அதையே சிற்பமாய், தெய்வ உருவமாய் செய்து, அதன்மீது நீரூற்றி அபிடேகமும் செய்து, மலர்களையும் சாத்திவிட்டு ஏதோ மந்திர உபாசனைகளையும் செய்துகொண்டு அதைச் சுற்றிச் சுற்றி வருகிறீர்கள். ஈசனுக்கு உகந்த கல் எதுவென வினவுகிறார்.

**ஓசையுள்ள கல்லைநீ உடைத்திரண்டாய் செய்துமே**
**வாசலிற் பதித்தகல்லை மழுங்கவே மிதிக்கின்றீர்**
**பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்து கிறீர்**
**ஈசனுக்குகந்த கல்லெந்தக் கல்லு சொல்லுமே (சிவ., 424)**

சிவவாக்கியர் கோவில் வழிபாடு, குடுமி வைத்தல், பூணூல் அணிதல், நீராடல், எச்சில் குறித்த கட்டுப்பாடுகள், புலால் உண்ணாமை, வேதம் ஓதுதல், தீட்டுக் கருத்தியல் ஆகியன குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எதிர்க்குரல் எழுப்பியுள்ளார்.

**ஆதியாகி அண்டரண்டம் அப்புறத்தும் அப்புறம்**
**சோதியாகி நின்றிலங்கு சுருதிநாத சோமனை**
**பேதியாமல் தம்முளே பெற்றுணர்ந்த ஞானிகாள்**
**சாதிபேதம் என்பதொன்று சற்றுமில்லை இல்லையே (சிவ., 215)**

எனச் சிவவாக்கியர் சாதிமுறைகளைச் சாடுவதோடு, சடங்குகளையும் வெறுத்தொதுக்குகிறார்.

**சித்தர் பாடல்களில் பெண்கள்**

சித்தர்கள் தங்களது பாடல்களில் பெண்களை, அழகுபடுத்திக் கொள்வதில் விருப்பம் உள்ளவர்களாகவும் அணிகலன்களை அணிந்து கொள்வதில் ஆர்வம் உடையவராகவும் மஞ்சளை முகத்தில் பூசிக் கொண்டவர்களாவும் சித்திரித்தனர். இவர்கள் எதனையும் மனத்தில் வைத்திருக்கும் வன்மையில்லாதவர்கள். மானத்தினைக் காப்பது சேலைக்குமேல் எதுவுமில்லை என்று கருதினர். பத்து மாதங்கள் குழந்தையைச் சுமந்து இறைவனையே தியானித்துத் தொந்தி சரிய அங்கமெல்லாம் நொந்து பிள்ளைகளைப் பெறுவர். கற்புடைய குலமகளிர் பத்தினிப் பெண்டிர் என்று போற்றப்பெற்றனர். கற்பு நிலை திரிந்தபெண்களும் இருந்ததைப் பட்டினத்தார் காட்டுவர். சமுதாயத்தில் கற்புடைய பெண்டிர் என்றும் போற்றப்பெற்றனர். சமுதாயத்தில் கற்புடைய பெண்டிர் இருந்ததைப் போன்று விலை மாதர்களும் இருந்தனர். தங்களை அழகுபடுத்திக் கொண்டு பட்டப்பகலில் வெளி மயக்குச் செய்து திரிவர் (இளமதி

ஜானகிராமன், பக். 3) எனக் குறிப்பிடுகிறார். பெண்கள் பொருளுக்காக ஆண்களை வயப்படுத்தும் நிலை மாறி பெண்கள் தங்களுக்கான புதிய வாழ்வினை தேடிக்கொள்ள வேண்டுமென்ற சிந்தனைகள் சித்தர் பாடல்களில் உள்ளன.

அனைத்துச் சித்தர்களும் பெண்களைச் சக்தியின் உருவமாகவே காண்கின்றனர். (இளமதி ஜானகிராமன், பக். 202) சித்தர்கள் பெண்களை வெறுப்பவர்கள் என்றும் அவர்களின் உடல் உறுப்புகளை இழிவாகப் பேசுபவர்கள் என்றும் பட்டினத்தார் பாடல்களைச் சான்று காட்டி உரைப்பவர்களும் உண்டு. பட்டினத்தார் வெளிமயக்கு செய்து ஆண்களிடம் பொருள் பெறும் பெண்களைக் குறித்துத்தான் அவ்விதம் பாடினாரே ஒழிய கற்புடைய பெண்களை அவர் குறைகூறவில்லை.

**சிவவாக்கியர் பாடல்களில் பெண்**

தவத்திற்கும் துறவுக்கும் இறை நிலையடைவதற்கும் பெண் தடையானவள் எனக்கருதி, பெண்ணின்பத்தைச் சித்தர்கள் பழித்துப் பேசினர். ஆனால் சிவவாக்கியர், பெண்களின் இயல்பான மாதவிடாய்யான தூமையைப் பேசுகிறார். அது பெண்களும் தீண்டத்தகாதவர்களாக அடிமைப்படுத்தப்பட்டு கிடப்பதை உணர்ந்த சிவவாக்கியர், பெண்களுக்காக ஓங்கி குரல் கொடுத்துள்ளார். சிவவாக்கியர், பெண் இன்பத்தினால் வரும் தீமைகளையும் பெண்களின் உயர்வையும் பேசுகிறார். மனித உடம்பு நிலையற்றது. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றேயாகும் என சிவவாக்கியர் எடுத்துரைக்கிறார்.

**பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்**
**கண்ணிலாணின் சுக்கிலம் கருவில் ஓங்கும் நாளிலே**
**மண்ணுள்ளோரும் விண்ணுள்ளோரும் வந்து எங்ஙனே (சிவ., 25)**

எனச் சமத்துவம் பேசுகிறார். பூமியில் ஆணும் பெண்ணும் சரிநிகராக வாழ்ந்தால் உயர்வினை அடைய முடியும் என்பதை உணர்த்துவதற்கு இறைவனை 'உமாபதி'யாக அர்த்தநாரீசுரராக சிவபிரானும் சக்தியுமாக,

**மாதர்தோள் சேராத தேவர் மாநிலத்தில் இல்லையே**
**மாதர்தோள் சேர்ந்தபோது மனிதர்வாழ்வு சிறக்குமே**
**மாதராகும் சக்தியொன்று மாட்டிக்கொண்ட தாதலால்**
**மாதராகும் நீலிகங்கை மகிழ்ந்துகொண்டான் ஈசனே (சிவ., 503)**

எனச் சிவவாக்கியர் குறிப்பிடுகிறார். சித்தர்கள் பெண் சக்தியே சித்திகளைத் தருகின்றது. அதோடு சிவசக்தி இணைப்பையும் பேசுகிறார்.அருள் தரித்த நாதர் பாதம் அம்மை பாதம் (சிவ. 4) ஆலமுண்டகண்டர்பாதம் அம்மைபாதம் (சிவ. 22) கொங்கை மங்கை பங்கர்(சிவ. 19) நாரிபங்கன் பாகன் (சிவ. 30) என்றெல்லாம் ஆண் பெண் இணைப்பையே பேசுகிறார். சித்தர் கணங்களின் தலைவனாகக் கருதப்படும் சிவனேகூட பெண்ணைப் பெருமைப்படுத்தவே விரும்பினான் என்பதை

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

**சக்தியாவது உன்னுடல் தயங்குசீவன் உட்சிவம்**
**வித்தர்காள் இதற்குமேல் பிதற்றுகின்றது இல்லையே**
**சுத்தி ஐந்து கூடம் ஒன்று சொல்லிறந்த தோர்வெளி**
**சக்தியும் சிவமும் ஆகிநின்ற தன்மையாவது உண்மையே (சிவ., 372)**

என்று உரைப்பர். இப்பாடலில் நமது உடலாக நிற்பது சக்தி; உள்ளிருக்கும் உயிராக இருப்பது சிவன். இவ்விரண்டையும் சுற்றி ஐந்து கோசங்கள் கோட்டைகட்டி உள்ளன. உள்ளே கூடமாக ஒளி நிற்கின்றது. எனவே சக்தியும் சிவமுமாக நிற்பது உண்மையாகும். என்று உரைப்பதால் உயிர்களின் செயற்பாட்டிற்கு முதன்மையாக உடல் விளங்குவதை அறியலாம்.

பெண்மையின் பெருமையை உணர்ந்த சிவவாக்கியர், பெண்ணின் உடல்சார்ந்த இயற்கைச் செயலாகிய குருதிப்போக்கைச் சுட்டிக்காட்டி அவளைத் தீட்டு என வெறுக்கும் மடமையைச் சிவவாக்கியர் எதிர்க்கிறார்.தூமைநீர் என்று சொல்லப்படும் அக்குருதிப் போக்கின் விளைவே மானுடத்தின் தோற்றமாகும்.அதனைத் தீட்டு என்று புறந்தள்ளும் மானிடரை நோக்கி,

**மாதமாதம் தூமைதான் மறந்துபோன தூமைதான்**
**மாதமற்று நின்றலோ வளர்ந்துரூப மானது**
**நாதமேது வேதமேது நற்குலங்கள் ஏதடா**
**வேதமோதும் வேதியர் விளைந்தவாறும் பேசடா (சிவ., 134)**

எனச் சினந்து சீறுகிறார்.

**தூமைகண்டு நின்ற பெண்ணின் தூமை தானும் கூறியே**
**சீமைஎங்கும் ஆணும் பெண்ணும் சேர்நடது உலகம் கண்டதே**
**தூமை தானும் ஆசையாய் துறந்திருந்த சீவனை**
**தூமைஅற்று கொண்டிருந்த தேசம் ஏது தேசமே! (சிவ., 137)**

இப்படி உலகில் உள்ள அனைத்தும் உருக்கொண்டது பெண்ணின் தூமையால் தான். ஆனால் அந்தப் பெண்ணை மாதத்தில் மூன்று நாள் அறையில் ஒதுக்கி வைத்து தீட்டு என்று சொல்கின்றனர். பத்து மாதம் கருவில் உருக்கொண்டு குழந்தைப் பிறந்தால் தீட்டு, இறந்த சாவுக்கு போய்விட்டு குளத்தில் துறைகளில் குளித்தால் அங்கும் தீட்டு இப்படி எதற்கும் தீட்டுப் பார்க்கும் சமூகத்தில் வாழுவது எப்படி (சிவ: 132) அறையினில் கிடந்தபோது அன்று தூமை என்கிறீர் (சிவ: 48) என வேதனைப்படுகிறார்.

**தூமை தூமை என்றுளே துவண்டு அலையும் ஏழைகாள்**
**தூமையான பெண்ணிருக்க தூமை போனது எவ்விடம்**
**ஆமை போல மூழ்கி வந்து அநேகவேதம் ஓதுநீர்**
**தூமையும் திரண்டுரண்டு சொற்குருக்கள் ஆனதே (சிவ., 49)**
**சொற்குருக்களும் ஆனதும் சோதிமேனி ஆவதும்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**மெய்க்குருக்கள் ஆனதும் வேணபூசை செய்வதும்**
**சற்குருக்கள் ஆனதும் சாத்திரங்கள் சொல்வதும்**
**செய்க்குருக்கள் ஆனதும் திரண்டுருண்ட தூமையே (சிவ., 50)**

என்னும் பாடல்களின் வழியே பெண்ணின் தூமையன்றி உலகில் வேறு ஏதும் உருவாகவில்லை என்ற உண்மையை சிவ்வாக்கியரின் பாடல்கள் உணர்த்துகின்றன.

**அன்னை கர்ப்பத் தூமையில் அவதரித்த சுக்கிலம்**
**மின்னையே தரித்ததும் பனித்துளி போலாகுமே**
**உன்னித்தொக் குளழலும் தூமையுள் அடங்கிடும்**
**பின்னையே பிறப்பதும் தூமைகாணும் பித்தரே (சிவ., 212)**
**ஐயிரண்டு திங்களாய் அடங்கி நின்ற தூமைதான்**
**கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டும் ஆகியே**
**மெய்திரண்டு சத்தமாய் விளங்கிரச கந்தமும்**
**துய்யகாயம் ஆனதும் சொல்லுகின்ற தூமையே (சிவ., 205)**

ஆகிய பாடல்கள் மாதவிலக்கு பற்றிய சிந்தனைகளை எடுத்துரைக்கின்றன. பெண்ணின் பெருமையைப் பேசும் சிவவாக்கியரின் பாடல்களில் பெண்ணின் அங்கங்களைப் பற்றி கருத்துகளும் இடம்பெறுகின்றன. மாதவிலக்கு என்பது பெண்களுக்கு மட்டுமே உரியது. பெண்ணே ஒதுக்கப்பட்டவள். அதிலும் மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்ட தாழ்ந்த சாதியைச் சார்ந்த பெண்கள் நிலை பெரிதும் பரிதாபத்திற்குறியது. ஆகவே, சாதீயத்தை எதிர்த்த சிவவாக்கியர் அங்கும் தாழ்ந்த சாதியென ஒதுக்கிவைக்கப்பட்ட பறைச்சியைப் பற்றி பேசுகிறார். (சிவ: 39).

**பின்னெழுந்த மாங்கிசத்தை பேதையர் கண் பற்றியே**
**பின்புமாங்கிசத்தினால் போக மாய்கை பண்ணினால்**
**துன்புறும் வினைகள் தாம் சூழ்ந்திடும் பின் என்றலோ**
**அன்பராயிருந்த பேர்களாறு நீந்தல் போல் வீடே (சிவ., 428)**

என்னும் பாடல் அவனவன் செய்யும் செயலுக்கு ஏற்ப பலனைப் பெறுவார்கள் எனக் குறிப்பிடுகிறது. மனதை அடக்கத் தெரியாத ஆண்களின் மனம் தான் அனைத்திற்கும் காரணமே தவிர பெண்கள் அல்ல என்கிறார் சிவவாக்கியர்

**சாண் இரு மடங்கினால் சரிந்த கொண்டைதன்னுளே**
**பேணி அப்பதிக்குளே பிறந்திறந்து உழலுவீர் (சிவ., 297)**
**வளர்ந்தெழுந்த கொங்கை தன்னை மாயமாமென்றெண்ணீநீர்**
**அருள்கொள் சீவராருடம்பை உண்மைமையகத் தேர்வீர்காள் (சிவ., 08)**

என்னும் பாடல்கள் பெண்ணாசைக் கொண்டால் வரும் துன்பங்களைச் சுட்டுகின்றன. இல்லற வாழ்க்கையில் தம் மனைவியோடு சிவவாக்கியர் ஈடுபட்ட போதும், அவர் தமது தவத்தைக் கை

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

விடவில்லை. அவரது மனைவியும் அவரின் தவத்துக்குத் தன்னால் எந்த ஒரு இடையீடும் நேராதபடி நடந்து கொண்டாள். தன் பாடல்கள் பெண்களுக்கான ஆதரவையே பதிவு செய்கிறார்.

**முடிவுரை**

பெண்களை வெறும் போகப் பொருளாய், ஊன்பொதிந்த கொட்டிலாய், இன்பம் தூய்க்கும் பதுமையாய் சித்தர்கள் சித்திரித்துள்ளர்.ஆனால் சிவவாக்கியரே சற்று மாறுபட்டு நின்று பெண்ணின் பெருமைகளைப் பாடியுள்ளார். பெண் சக்தியே இவ்வுலகத் தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமாகிறது, அனைத்திற்கும் மூலமாக உள்ளது, சித்திகளைத் தருவது, இன்பத்தை அளிப்பது, இறையுடன் ஒன்ற உறுதுணைபுரிவது எனும் நிலைகளில் பெண்மையைப் போற்றியுள்ளார். சித்தர்கள் என்றாலே இல்லற வாழ்வையும் பெண்டிரையும் பழித்துப் பேசும் இயல்பினர் என்னும் நோக்கிற்கு மாறாக சிவவாக்கியரின் பாடல்களில் கருத்துகள் இடம்பெற்று உள்ளன.

**குறிப்புகள்**

[1] ஆனந்தரவி சாஸ்திரி, க. ஆ. *சித்தர்களின் சமுதாயச் சிந்தனைகள்*, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2008.

[2] இளமதிசானகிராமன், க. *சித்தர்களின் சிந்தனைகள் பாகம் -1*, குறிஞ்சி பதிப்பகம், புதுச்சேரி-104. 1991.

[3] இளமதி சானகிராமன், க. *சித்தர் இலக்கியங்களில் பெண்கள் குறித்த பதிவுகள், வல்லமை மின்னிதழ்*, ஜனவரி 18, 2019.

[4] இளமதிசானகிராமன், க. *சித்தர் இலக்கியங்களின் வழி இறைக்ககோட்பாடு, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, 30-04-2021.

[5] வடிவேலு முதலியார், மா. *சிவவாக்கியர் பாடல் மூலமும் உரையும்*, இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ், சென்னை, 1953.

[6] வானதீபன், *பதினெட்டுச் சித்தர்களின் சீரிய வாழ்க்கை*, மகா பதிப்பகம், கௌரி வாக்கம், சென்னை, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.